# செயலாற்றுகை அறிக்கை

# 2012

## கல்வி வெளியிட்டுத் திணைக்களம்

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| 1. அறிமுகமும் பின்னணி விபரங்களும் | 1 |
| 2. தொலை நோக்கும் - பணிக்கூற்றும் | 2 |
| 3. ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் - நிருவாக ஒழுங்கும் | 3- 4 |
| 4. தாபனப் பிரிவு | 5 - 7 |
| 5. அபிவிருத்திப் பிரிவு | 8 -12 |
| 6. தகவல் தொழிநுட்பப் பிரிவு | 13 -14 |
| 7. உற்பத்திப் பிரிவு | 15 -16 |
| 8. வெளியீட்டுப் பிரிவு | 17 |
| 9. விநியோகப் பிரிவு | 18 - 21 |
| 10. நிதிப் பிரிவு | 22- 26 |
| 11. வருடாந்த ஒதுக்கீடும் செலவீனங்களும் | 27 |
| 12. 2012 முன்னேற்றத்தைக் காட்டும் பட்டியல் | 28- 32 |
| 13. புதிய பிரவேசங்கள் | 33 |
| 14. சுருக்கம் | 34 -36 |

# 1. அறிமுகமும் பின்னணி விபரங்களும்

## அறிமுகம்

கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் உயர் தரத்திலானதொரு திணைக்களமாகும். அரசினால் பாடசாலைப் பாடநூல்களை இலவசமாக விநியோகிக்கும் தேசிய கொள்கையை அமுல் நடத்துவதே இத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும்

இதற்கு மேலதிகமாக க.பொ.த. உயர் தர மற்றும் மேல்மட்டப் பரீட்சைகளுக்கான தரமான வாசிப்பு நூல்களை வெளியிடல், ஏனைய கற்றல் சாதனங்களை உற்பத்தி செய்வதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை அர்த்தமுள்ளதாக ஆக்குவதற்குப் பங்களிப்புச் செய்தல் என்பன இத்திணைக்களத்தின் செயற்பாட்டுக்குட்பட்டவையாகும்.

## பின்னணி

1965 மார்ச் 27 ஆம் திகதி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது நிதி அமைச்சின் கீழ் தனியான செலவுப் பிரிவொன்றாகத் தாபிக்கப்பட்டது. மேலும் 1966 செப்டம்பர் 30 ஆம் திகதியன்று இலங்கை அரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியிட்டுத் திணைக்களமானது அதற்குரித்தான கல்வி மற்றும் கலாச்சார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.

1966 ஆம் ஆண்டு மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்குக் கீழ் வரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- ❖ ஆரம்ப, இரண்டாந்தர, உயர் கல்விகளின் பயன்பாட்டுக்காக அனுமதிக்கப்பட்ட பாடநூல்களை மொழி பெயர்த்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல் வெளியீட்டு உரிமையை (கொள்வனவு செய்தல்) பணங் கொடுத்து வாங்குதல்.

- ❖ கல்வி நடவடிக்கைக்கு தேவையான பாடநூல்கள், அகராதிகள், கலைச்சொற்றொகுதிகள் வேறு நூல்களை உற்பத்தி செய்தல், பகிரங்கப் படுத்தல், விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

- ❖ மாணவர் துணைச்சாதனங்களான கற்புல, செவிப்புல மற்றும் சாதனங்களை உற்பத்தி செய்தல் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல்.

- ❖ வாசித்தல் சாதனங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

B தரத்திலான ஒரு திணைக்களமாக உருவாக்கப்பட்ட கல்வி வெளியீட்டுத் திணைக்களமானது 2004.07.14 திகதியன்று உயர்தரமாக்கப்பட்டதுடன் கல்வி வெளியீட்டு ஆணையாளர் எனும் பதவி கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் என உயர்த்தப்பட்டது இம் முக்கிய வேறுபாடு காரணமாக கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் நிலையானது கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவரின் நிலைக்கு உயர்வடைந்தது.

## 2. தொலை நோக்கும் பணிக்கூற்றும்

### தொலை நோக்கு

சர்வதேச கல்வி அபிவிருத்தியுடன் இணைந்த உயர்தரத்திலான பாடநூல்களை உருவாக்குவதன் மூலம் அனைவருக்கும் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்தல்.

### பணி

இலவச பாடநூல் விநியோகம் எனும் அரசின் தேசிய கருத்திட்டத்தைச் செயற்படுத்துவதுடன் கல்விச் செயற்பாட்டிற்குத் தேவைப்படும் ஏனைய பாடநூல்கள் செயல்நூல்கள் மொழிப்பெயர்ப்பு நூல்கள் கலைச் சொல் அகராதிகள், மேலதிக வாசிப்பு நூல்கள், சொற்களஞ்சியங்கள் உட்பட ஏனைய கட்புல – செவிப்புல துணைச்சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிப்பதனால் கல்வித்தரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் நாட்டுக்கு செயற்திறன் மிக்கதும், பண்பும் அறிவும் மிக்கதுமான பிரஜைகள் குழு ஒன்றை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்தல்.


## 3. கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பும் - நிருவாக ஒழுங்கும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்படும் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்திற்கு அவரின் நிருவாக செயற்பாடுகளில் இலங்கை கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தரான ஆணையாளர்கள் இருவரதும் பிரதி, உதவி ஆணையாளர்கள் 24 பேரினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. நிதிப்பிரிவுக்குப் பொறுப்பாக பிரதான கணக்காளர்களாக இலங்கை கணக்காளர் சேவை 1ஐச் சேர்ந்த ஓர் அதிகாரியும் 2 ஐச் சேர்ந்த ஒர் அதிகாரியும் செயற்படுவதுடன், உள்ளக கணக்காய்வுப் பிரிவுக்குப் பொறுப்பாக கணக்காளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த ஒரு அதிகாரியும் சேவையாற்றுகின்றனர்.

நிருவாக இலகுபடுத்தலின் நிமிர்த்தம் திணைக்களமானது நிருவாகப்பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, உற்பத்திப் பிரிவு, விநியோகப் பிரிவு, நிதிப்பிரிவு என பிரதான 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பானது மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

# கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பு



## 4. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவின் பிரதான கடமையாவது திணைக்களத்தின் சாதாரண நிருவாகமும் மற்றும் அனைத்து ஊழியர்களதும் நிறுவன நடவடிக்கை தொடர்பான கருமங்களை நிறைவு செய்தலுமாகும்.

**2012.12.31 திகதியன்று திணைக்கள உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பு கீழ்வருமாறு.**

| பதவி | உரிய சேவை | வகுப்பு / தரம் | அனுமதிக்கப் பட்ட உத்தியோகத் தர் தொகை | தற்போதுள்ள தொகை | பதவி வெற்றிட தொகை |
|---|---|---|---|---|---|
| கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் | இ.க.நி.சே | I | 01 | 01 | - |
| ஆணையாளர் | இ.க.நி.சே | I | 02 | 02 | - |
| பிரதம கணக்காளர்<br>பிரதம உள்ளக கணக்காய்வாளர்கள்<br>கணக்காளர் | இ.க..சே<br>இ.க.சே<br>இ.க..சே | I<br>I<br>II/II | 01<br>01<br>01 | 01<br>01<br>01 | -<br>-<br>- |
| பிரதி ஆணையாளர்<br>உதவி ஆணையாளர் | இ.க.நி.சே | I/II<br>III | 38 | 24 | 14 |
| உதவி ஆணையாளர் (தகவல் தொழிநுட்பம் முறைமை பகுப்பாய்வாளர்) | இ.த.அ.தொ.நு.சே | III | 01 | 01 | - |
| நிருவாக உத்தியோகத்தர் | அ.மு.உ..சே | உயர் தரம் | 01 | - | 01 |
| விற்பனை முகாமையாளர் | திணைக்களத்தினால் | | 01 | 01 | - |
| மொழி பெயர்பாளர் | திணைக்களத்தினால் | சிங்களம்/தமிழ்<br>சிங்களம்/ஆங்கிலம் | 01<br>01 | - | 02 |
| கணினி பக்க அமைப்பாளர் | திணைக்களத்தினால் | | 06 | - | 06 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | அ.மு.உ..சே<br>அ.மு.உ..சே<br>அ.மு.உ..சே | I<br>II<br>III | 53 | 10<br>15<br>13 | 15 |
| நூலகர் | நூலகர் சேவை | III | 01 | - | 01 |
| அபிவிருத்தி உதவியாளர் | கிட்டிய சேவை | | 20 | 04 | 16 |
| நிதி உதவியாளர்<br>வரவு செலவுஉதவியாளர் | கிட்டிய சேவை | | 01<br>01 | 01<br>01 | - |
| சரவை நோக்குனர் | திணைக்களத்தினால் | சிங்கள மொ.மூ<br>ஆங்கில மொ.மூ<br>தமிழ் மொ.மூ | 02<br>01<br>01 | -<br>-<br>- | 02<br>01<br>01 |
| சிற்பக்கலைஞர் | திணைக்களத்தினால் | - | 01 | - | 01 |
| சாரதி | சாரதிமார் சேவை | I<br>II ‘அ’<br>II ‘ஆ’ | 12 | 02<br>03<br>06 | 01 |
| காரியாலய ஊழியர் சேவை | கா.ஊ.சே | I<br>II<br>III | 15 | 01<br>03<br>- | 11 |
| விற்பனை உதவியாளர் | | | 15 | 09 | 06 |
| களஞ்சியசாலைக் காவலாளர் | முதனிலை சேவை | | 07 | 06 | 01 |
| களஞ்சியசாலை ஊழியர் | முதனிலை சேவை | | 35 | 27 | 08 |
| ஆய்வு கூட ஊழியர் | முதனிலை சேவை | | 01 | 01 | - |
| நூலக ஊழியர் | முதனிலை சேவை | | 01 | 01 | - |
| **மொத்தம்** | | | **222** | **135** | **87** |

**2012 ஆம் ஆண்டினுள் மாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்**

| பதவி | தரம் | மாற்றம் பெற்று வந்தோர் தொகை |
|---|---|---|
| 1. இலங்கை கணக்காளர் சேவை | Iம் வகுப்பு | 01 |
| 2. இல.க.நி.சே | Iம் வகுப்பு | 01 |
| 3. இல.க.நி.சே | IIம் வகுப்பு | 01 |
| 4. இல.க.நி.சே | IIIம் வகுப்பு | 01 |
| 5. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | II ம் வகுப்பு | 01 |
| 6. சாரதி | Iம் வகுப்பு | 01 |
| 7. கா.ஊ.சே | Iம் வகுப்பு | 01 |

**2012 ஆம் ஆண்டிற்குள் மாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்**

| பதவி | வகுப்பு | உத்தியோகத்தர் தொகை |
|---|---|---|
| 1. இல.க.நி.சே | IIIம் வகுப்பு | 01 |
| 2. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | II ம் வகுப்பு | 01 |
| 3. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை | IIIம் வகுப்பு | 01 |
| 4. சாரதி | Iம் வகுப்பு | 01 |
| 5. கா.ஊ.சே | IIIம் வகுப்பு | 01 |

**2012 ஆம் வருடத்துள் பதவி உயர்வு பெற்ற உத்தியோகத்தர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 1. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் - II இருந்து I க்கு | 01 |

**2012 ஆம் வருடத்துள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 1. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை I | 03 |
| 2. நிருவாக அதிகாரி | 01 |

**2012 ஆம் வருடம் புதிதாக பதவியேற்றோர்**

| பதவி | உத்தியோகத்தர் தொகை |
|---|---|
| 1. சாரதி | 01 |

**2012 ஆம் வருடத்துள் வெளிநாட்டுப் பயிற்சி**

தென்கொரிய அரச அனுசரனையில் 2012.09.24 முதல் 2012.09.28 வரை தென்கொரியாவில் இடம்பெற்ற கல்வியியல் செயலமர்வில் கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம் பங்குபற்றினார்.

**தேசிய பயிற்சிகள்**

கொழும்பு பல்கலைக் கழகத்தின் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்துக்கான தேசிய நிறுவகம் மூலம் எழுத்தாளர்களுக்காக நடாத்தப்படுகின்ற டிஜிட்டல் தொழிநுட்ப பாடநெறியில் (10 நாட்கள்) உதவி ஆணையாளர் நால்வர் பங்குபற்றியுள்ளனர்.

**முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தருக்கான பயிற்சிகள்**

| பாடநெறி | பங்கேற்ற உத்தியோகத்தர் |
|---|---|
| 1. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III (சேவைமுன் பயிற்சி) | 01 |
| 2. சுய விபரக் கோப்பைக் கையாழுதல் தொடர்பான பயிற்சிநெறி | 02 |
| 3. காரியாலய முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பாடநெறி | 03 |
| 4. ஆரம்பக் கணினிப் பயிற்சி | 01 |
| 5. சம்பள சீரமைத்தல் தொடர்பான பயிற்சி | 02 |
| 6. வினைத்திறன் மிக்க நிருவாகமும் மனிதவள முகாமைத்துவமும் தொடர்பான பயிற்சி | 02 |
| 7. செயற்திட்ட முகாமை தொடர்பான பயிற்சி | 01 |
| 8. அரச கணக்காய்வு நடவடிக்கை தொடர்பான பயிற்சி | 02 |

# 5. அபிவிருத்திப் பிரிவு

**அறிமுகம்**

கற்றல் சாதனங்களை உற்பத்திசெய்து விநியோகிப்பதனால் கல்வியின் தரத்தை விருத்திசெய்வதன் மூலம் நாட்டுக்குப் பயன்மிக்க, தரமான, புத்திகூர்மைமிக்க மக்கள் குழுவொன்றை உருவாக்கும் நோக்கத்துக்காகப் பாடுபடும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கல்வித்துறைசார் பிரிவு அபிவிருத்திப் பிரிவாகும். அதற்கு வழங்கப்பட்டுள்ள (அடிப்படைப்) முக்கிய பொறுப்புக்களாவன.

- தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்படும் பாடத்திட்டத்தை மையமாகக் கொண்டு பாடநூல்களை ஆக்குதல் மற்றும்
- கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் ஆக்கப்பட்டு மீள்பதிப்பு செய்யப்படும் பாடநூல்களின் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு உத்திகளையும் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.

இதற்கு மேலதிகமாக

- கா.பொ.த. உ/த மற்றும் வேறு உயர்தர பரீட்சைகளுக்கான மேலதிக வாசிப்பு நூல்களை உருவாக்குவதும் அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு பொறுப்பாகும்.

சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூலமான மூன்று பிரிவுகளுடன் கூடிய இப்பகுதி ஆணையாளர் (அபிவிருத்தி) அவர்களின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் இயங்குகின்றது. அதன் உத்தியோகத்தர்களாக 2012 ஆம் ஆண்டில் பிரதி மற்றும் உதவி ஆணையாளர்கள் 28 பேரும் அபிவிருத்தி உதவியாளர்கள் இருவரும் காணப்பட்டனர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் ஆக்கப்பட்ட பாடநூல்களின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு 2012 ஆம் ஆண்டிற்குள் பல்வேறு உத்திகள் நடைமுறைப் படுத்தப்பட்டன அவை பற்றிய விபரங்கள் பின்வருமாறு

01. 2013 ஆம் ஆண்டுக்காக அச்சிடப்பட்ட பாடநூல்களின் தரத்தை விருத்தி செய்வதன் (விடயதானத்தை இற்றைப்படுத்தலும் பிழையற்ற விடயங்களை உள்வாங்குதலும்) பொருட்டு கல்விப் புலத்தின் பல்வேறு துறைகளிலுமான (நிபுணத்துவமுள்ள) வளவாளர்களின் பங்களிப்புடன் பல்வேறு பாடநூல்கள் சீர்படுத்தலுக்கான செயலமர்வுகள் நடாத்தப்பட்டன. இதன் ஆரம்பமாக செயலமர்வுக்காக பாடப்புலமையுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள் உள்ளடங்கலான பாடத்துக்கான விசேட குழுவொன்றைத் நிறுவும் பணி இடம் பெற்றது.

02. இதன் போது பாடநூல்களில் அடங்கியுள்ள விடயதானங்கள் இற்றைப் படுத்தப்பட்டதுடன் திருத்தங்கள் உள்வாங்கப்படுவதும் இடம்பெற்றன. இதன்பின்னர் மிகப் புதிய மூலாதாரங்கள் மூலம் விடயதானங்கள், தரவுகள், படங்கள் உள்வாங்கப்பட்டு பாடநூல்கள் மீள்பதிப்பிக்குத் தயார்படுத்தப்பட்டன. திருத்தத்துக்குட்படுத்தப்பட்ட பிரதி கணினி மயப்படுத்தப்பட்டு மென்பிரதியைத் தயார்செய்தல் ஏப்ரல் மாத இறுதியில் மேற்கொள்ளப்பட்டது. மீள் பதிப்புக்குத் தயார்செய்யப்பட்ட கைப்பிரதியும் மென்பிரதியும் உற்பத்திப் பிரிவுக்குக் கையளிக்கப்பட்டது. மே, ஜுன், ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் அச்சகங்களிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிகள் சரவை பார்க்கப்பட்டு விடய உள்ளடக்கம், படங்களின் உண்மைத்தன்மை என்பன உறுதிப்படுத்தப்பட்டு அச்சிடுவதற்காக ஒப்படைத்தல் இடம்பெற்றது.

| தொடர் இலக்கம் | நாட்கள் | செயலமர்வு நடாத்தப்பட்ட பாடங்கள் | பங்குபற்றியோர் தொகை |
|---|---|---|---|
| 01 | 2012 பெப்ரவரி 21, 22, 23 | **தரம் 6-11**<br>சிங்கள மொழியும் இலக்கியமும்<br>புவியியல்<br>புத்ததர்மம்<br>ஆங்கிலம்<br>விஞ்ஞானம் (சி/த/ஆ)<br>வரலாறு (சி/த)<br>சுகாதாரமும் உடற்கல்வியும்(த/ஆ)<br>கணிதம் (சி/த/ஆ) | 94 |
| 02 | 2012 பெப்ரவரி 28, 29<br>மார்ச் 01 | **தரம் 1-5**<br>கணிதம் (சி/த) | 12 |

03. தரம் 1-5 வகுப்புகளுக்கான புதிய பிரிவெனா நூல்களை ஆக்கும் பணி 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2012 ஆம் ஆண்டு இப்புதிய செயற்திட்டமானது தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இந்த வருடம் புதிதாக ஆக்கப்பட்ட பிரிவெனாப் பாடநூல்கள் கீழ்வருமாறு

சமஸ்கிருதம் - தரம் 2
சிங்களம் - தரம் 1
சிங்களம் - தரம் 2
சமூகவியல் - தரம் 3
பாளி - தரம் 1

பாடநூலாக்கத்துக்கு மேலதிகமாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் போது தேவைப்படுகின்ற ஏனைய கற்றல் உபகரணங்களை ஆக்குதலும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கருமங்களுள் உள்ளடங்குகின்றது. இதற்கிணங்க 2012 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

- பாடத்திட்டம் மற்றம் புலமைப்பரிசில் வினாப்பத்திரம் மூலம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான வினாவிடை நூலை அச்சிடல்.
- க.பொ.த சா/த பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குப் பயனளிக்கக் கூடிய விதத்தில் சகல பிரதான பாடங்களுக்குமான கடந்தகாலப் பரீட்சை வினாத்தாள்கள் அடங்கிய நூலொன்றை மூன்று மொழி மூலமாகவும் வெளியிடல்.
- க.பொ.த உ/த கலை, வர்த்தக, விஞ்ஞான பாடங்களுக்குரிய வினாத்தாள் நூல்கள் அச்சிடல்.

இதற்கு மேலதிகமாக கீழ்வரக்கூடிய உயர்தரத்துக்கான மேலதிக நூல்களும் ஆக்கப்பட்டன.

| நூல்களின் பெயர் | போக்கு(முன்னேற்றம்) |
|---|---|
| உயர்தர இரசாயனவியல் | ஆக்கப்பட்டுக்கொண்டுள்ளது |
| கிளியின் செய்தி (கிரா சங்தேசய) | அச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது |
| சிறுகதைத் தொகுதி | அச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது |
| உயர்தர பௌதிக - புவியியல் I | அச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது |
| நூதன பதய ஸங்கிரஹய | அச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது |
| க.பொ.த உ/த க்கான ‘‘மலகிய அத்தோ’’ நாவல் விமர்சனம் | இறுதிப் பதிப்பு நடவடிக்கைகள் நடந்துகொண்டுள்ளன |

மேலுள்ள நூல்களைக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்களிலும் எமது திணைக்களத்தில் பதிவு செய்துள்ள சகல நூல்விற்பனை நிலையங்களிலும் சலுகை விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

உலக வங்கி உதவியின் மூலம் பிட்டிபன நூல்களஞ்சிய சாலைத்தொகுதி நிர்மான வேலைகள் 2012 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து இடம்பெற்றன. களஞ்சியசாலைத் தொகுதியின் III ஆம் கட்ட நிர்மாணப் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளன.

04. உயர்ந்த பௌதிக தரம்மிக்க நூல்களை உற்பத்தி செய்தல் எனும் நோக்கில் நூலை அச்சிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கடதாசியின் தரத்தைப் பரீட்சிப்பதற்காக ஆய்வு கூட்டமொன்று நடாத்திச் செயல்ப்படுவதுடன் 2011 ஆம் ஆண்டு சகல நூல்களுக்குமாகப் பயன்படுத்தப்பட்ட கடதாசிகளில் கீழ்வரும் தரங்களைப் பரீசீலிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

GSM 80 + 2.5 (Tolerance)
Printing paper - Quality Wood Free Surface Sized
(දැව අඩු බව)

Brightness (ISO) - 82% minimum
(කඩදසියේ දීප්තිය)

Opacity - 90% minimum
(පාරාන්ධ බව)

Tensile Index - MD - 35 min kNm/kg
- CD - 20 min kNm/kg
(මුද්‍රණ කඩදසියේ ආතතිය)

05. மனிதவள விருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கொழும்பு பல்கலைக் கழகத்தில், தேசிய நூலக மற்றும் விஞ்ஞாபன ஆய்வகம் (NILIS) மூலம் எழுத்தாளர்களுக்கென நடாத்தப்பட்ட டிஜிட்டல் தொழில்நுட்பப் பாடநெறியில் (10 நாட்கள்) உதவி ஆணையாளர்கள் நால்வர் பங்கேற்றதுடன், பாடநெறி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யப்பட்டது.



5 ஆம் தர புலமைப்பரிசில் பரிட்சைக்காக
வினாவிடை நூல்கள்
(சிங்களம் மற்றும் தமிழ்மொழி மூலமாக)



க.பொ.த (சா.த)ப் பரிட்சைக்காக
வினா விடை நூல்கள் சிங்களம், தமிழ்,
ஆங்கிலம் ஆகிய மும்மொழி மூலமாகவும்



மேலதிக வாசிப்பு நூல்கள்




பிரிவெனாக்கல்விக்கான புதிய
நூல்கள்

## 6. தகவல் தொழில்நுட்பப் பிரிவு

திணைக்களத்தின் சகலவித தகவல்களையும், விபரங்களையும் நடாத்திச் செல்வதும், இற்றைப்படுத்துவது தொடர்பான பொறுப்புக்களும் பாடநூல்கள் - மேலதிகநூல்கள் வேறு நூல்களைக் கணினிமயப்படுத்தல் அவற்றின் மென்பிரதியைப் பெற்று அச்சுக்காகப் பொறுத்தமான விதத்தில் வடிவமைத்தல் என்பன இதன் பிரதான செயற்பாடாகும். தகவல் தொழில்நுட்பப் பாடப்பொறுப்பு உதவி ஆணையாளர் மற்றும் முறைமைப் பகுப்பாய்வாளர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் இவ்வனைத்து கருமங்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் இடம்பெறும் செயற்பாடுகளுக்கு உதவும் பொருட்டு சமயா சமய அடிப்படையில் சேவையாற்றும் கனிஷ்ட ஊழியர்கள் 11 பேர் இப்பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

**கீழ்வரும் பணிகள் இப்பிரிவு மூலம் இடம்பெறுகின்றன.**

1. 2013 ஆம் வருடத்துக்கான கோரல் படிவத்தை வடிவமைத்து உற்பத்திப் பிரிவுக்கு ஒப்படைத்தல்.
2. 2013 ஆம் வருடத்துக்கு அச்சிடுவதற்கு அவசியமான நூல்களின் தொகைபற்றிய விபரங்களை உற்பத்திப் பிரிவிற்கு வழங்குதல்.
3. அபிவிருத்திப் பிரிவில் தயாரிக்கப்பட்ட பாடநூல்களைக் கணினிமயப்படுத்தலும் மென்பிரதியைத் தயாரித்தலும்.
4. களஞ்சியசாலைகளில் பாடநூல் விநியோகம் தொடர்பான விபரங்களைக் கணினிமயப்படுத்துவதற்கு அவசியமான கணினிவடிவமைப்பை உருவமைத்து களஞ்சியங்களின் தகவல்களை நடாத்திச்செல்லல்.
5. விநியோகித்து முடிவடைந்த பாடநூல்களின் தொகையையும் பெறுமதியையும் கணித்து நிதிப்பிரிவிற்கு வழங்கல்.
6. திணைக்களத்தின் இணையதளத்தை இற்றைப்படுத்தி நடாத்திச்செல்வதும் இணையதளத்திற்குப் பாடநூல்களை உள்வாங்குவதும்.
7. திணைக்களத்தின் கீழ் இயங்கும் விற்பனை மேம்பாட்டு நிலையங்களுக்கு அவசியமான புதிய தொழிநுட்ப முறைகளை அறிமுகப்படத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
8. பாடசாலைகளிலிருந்து பாடநூல்களுக்கான கோரல்களைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான நுட்பமுறைகளை அறிமுகப்படுத்திக் கொடுத்தல்.
9. 5 ஆம் தரத்துக்கான வினாவிடை நூலிற்கும் க.பொ.த சா/த மற்றும் உயர்தரப் பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கடந்தகால வினாப்பத்திர நூல்களினதும் மாதிரிவினாவிடைகளுட்பட அந்நூல்களின் வெளி அட்டைகளை வடிவமைத்தல்.
10. மேலதிக நூல்களை கணினிமயப்படுத்தல்.
11. கல்வி வெளியீட்டுத்திணைக்களம், கல்வி அமைச்சுகளின் விழாக்களுக்கு அவசியமான அழைப்பிதழ்கள் பதாகை, சுவரொட்டிகளை (பனர், போஸ்டர்களை) வடிவமைத்தல்
12. திணைக்களத்தின் அனைத்து கணினிகளையும் பராமரித்தல்.

**பாடநூல் இணையதளத்திற்கு**





[www.edupub.gov](http://www.edupub.gov). lk மூலமாகப் - பாடநூல் வெப்தளத்துக்கு






## 7. உற்பத்திப் பிரிவு

**அறிமுகம்**

கல்விவெளியீட்டுத் திணைக்களத்தின் உற்பத்திப்பிரிவில் - ஆணையாளர் (உற்பத்தி மற்றும் விநியோகம்) இன் கீழ் - உதவி ஆணையாளர் இருவருட அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர் இருவரும் காரியாலய உதவியாளர் மற்றும் சமயாசமய ஊழியர்கள் மூவரும் சேவையாற்றுகின்றனர் - கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் அனுசரனையுடன் பாடசாலை மாணவர்களுக்காக உருவாக்கப்படுகின்ற சகல பாடநூல்களையும் அரசாங்க அச்சகம், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், மற்றும் தனியார் அச்சகங்கள் மூலமாக அச்சடிப்பதே இப்பிரிவின் பிரதான பணியாகும். இதற்கு மேலதிகமாக தேசிய கல்வி நிறுவகம் மூலம் வடிவமைக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளையும், பாடத்திட்டங்களையும் அச்சடிப்பதற்கு அவசியமான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**2012 ஆம் வருடத்துள் இப்பிரிவின் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட கருமங்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.**

1. பாடசாலைப் பாடநூல்களுக்கான ஒப்பந்தங்களை (Tender) வழங்குவதற்குமுன் விவரக்குறிப்புகளை அமைப்பதற்கு அவசியமான விபரங்களைத் திரட்டுதல். தகவல் தொழில்நுட்பப்பிரிவு, விநியோகப்பிரிவு மற்றும் களஞ்சியங்களிலிருந்து மொத்த இருப்பைப்பெறல்.

2. விவரக்குறிப்புக்குழுவொன்றின் மூலம் 2013க்கான பாடநூல் அச்சுக்கான விவரக் குறிப்புகளைத் திரட்டுதல்.

3. விவரக்குறிப்பு குழுவினால் உருவாக்கப்பட்ட (திரட்டப்பட்ட) அறிக்கையைக் கல்விவெளியீட்டு ஆணையாளர் மூலம் அனுமதிபெற்று நிதிப்பிரிவிற்குக் கையளித்தல்.

4. ஒவ்வொரு பாடப்பொறுப்பு அதிகாரிகளுக்கும் அச்சகப்பிரதி (Press Copy) மற்றும் மாற்றப்பட்ட பிரதி(CT)களை வழங்கி அவற்றில் திருத்தங்களை மேற்கொண்டு உரிய இறுவட்டை ஒப்பந்தங்களை தகவல் தொழில்நுட்பப் பிரிவு மூலம் பரிசிலித்தல்.

5. உரிய Tender களைப் பெற்றுக்கொண்ட நிறுவனங்களுக்கு அச்சகப்பிரதி (Press Copy) களையும், சரியான இறுவட்டையும் வழங்குதல்.

6. சரவைப்பிரதிகளை அச்சகங்களிலிருந்து வரவழைத்து உரிய அதிகாரிகள் மூலம் பரிசீலித்து மீண்டும் அச்சகங்களுக்கு வழங்கும் செயற்பாட்டைத் மேற்கொள்ளல்.

7. உரிய காலத்துள் அச்சகத்தாரை அறிவுறுத்தி சரியான நூல் தொகையை களஞ்கியசாலைக்குப் பெற்றுக் கொடுத்தல்.

8. அச்சகங்கள் மூலம் ஏற்படும் அச்சுப்பிழைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல்.

9. அவசியமேற்படுமிடத்து அச்சகங்களைப் பரிசீலித்தலும் அவற்றின் அச்சிடல் தொடர்பான திட்டங்களைப் பெற்று அவற்றைப் பரிசீலனைக்குட்படுத்தி உற்பத்திப் போக்கு தொடர்பான நாளாந்த அறிக்கைகளை ஆணையாளர் நாயகத்திற்கு முன்வைத்லும்.

10. பாடசாலைப் பாடநூல்களின் பௌதிகத்தன்மையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இதன் நிமித்தம் உள்வாங்கப்பட்டுள்ள பத்திரிகை (Paper) வெளி அட்டைகளுக்காக நான்கு படங்கள் மற்றும் தேசப்படங்களை வடிவமைத்தல்.வெளி அட்டைகளுக்காக லெமினேட் ஆட்போர்டையும், 220gsm அளவு கடதாசியையும் உள்வாங்குவதன் மூலம் கவர்ச்சிமிக்க நூல் தொகுதியொன்றை மாணவர்களுக்குக் கிடைக்கச் செய்தல் எனும் விபரக்குறிப்புக் (பிரதிதர) குழுவின் பரிந்துரையை நடைமுறைப்படுத்தல்.

11. அனைத்து நூல்களும் விபரக்குறிப்புக்கு பொருத்தும் விதத்தில் காணப்படுகின்றதா எனப் பரிசீலிப்பதற்காக ஆய்வுகூட அறிக்கையொன்றைப் பெற்றுக்கொள்ளல்.

12. தேசிய கல்வி நிறுவகத்தடன் தொடர்புக்கொண்டு ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடல்.

13. மேலதிக வாசிப்பு நூல்களை மீள் அச்சிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்.

14. பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புக் கொண்டு க.பொ.த (சா/த) க.பொ.த(உ/த) தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைகளுக்கான வினாவிடை நூல்களை அச்சிடல்.

## 8. வெளியீட்டுப் பிரிவு (தாபனப்பிரிவு)

கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெளியீட்டுப்பிரிவில் உற்பத்தி மற்றும் விநியோகத்திற்குப் பொறுப்பான ஆணையாளரின் கீழ் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையைச் சேர்ந்த ஆறு உத்தியோகத்தர்கள் சேவையாற்றகின்றனர்.

2012 ஆம் ஆண்டில் விநியோகப்பிரிவின் மூலம் நிறைவு செய்யப்பட்ட செயற்பாடுகளின் சுருக்கமான விபரம் கீழ்வருமாறு.

1. பாடநூல்கள் மற்றும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை அச்சிடுவதற்கான கோரல்களை அச்சகத்தாருக்கு வழங்கல்.

2. ஒப்பந்தங்களை ஒழுங்கமைத்து அச்சகத்தாருடன் உடன்பாட்டுக்கு வருதல்.

3. மேலதிக நூல்களுக்கான ஒப்பந்த மதிப்பீடுகளைப் பெறுவது முதல் அச்சிடுதல் வரையிலான அனைத்து எழுத்து மூல நடவடிக்கைகளையும் நடைமுறைப் படுத்தல்.

4. அரச நிறுவனங்களுக்கான கேள்வி கோரல்களுக்கு மேலதிகமாக பாடநூல்கருத்துக்கான மதிப்பீடுகளை எடுப்பிப்பது முதல் கோரல்களை ஒப்படைப்பது வரையிலான சகல நடவடிக்கைகளும்.

5. நூல்களுக்கான விலைகளை நிர்ணயம் செய்தல்.

6. அச்சகத்தாருக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கான வவுச்சர்களை ஒழுங்கமைத்தல்.

# 9. விநியோகப் பிரிவு

அறிமுகம்

பாடநூல் விநியோகப் பிரிவானது உற்பத்தி மற்றும் விநியோகத்திற்கான ஆணையாளரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்றது. உதவி ஆணையாளரொருவர் மற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை அதிகாரிகள் இருவருடன் சமயாசமய அடிப்படையில் இயங்குகின்ற கனிஷ்ட சேவையாளர் 22 பேரும் இப்பிரிவில் சேவையாற்றுகின்றனர். அரச மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகளில் தரம் 1 முதல் 11 வரை கல்வி கற்கும் 4 மில்லியனுக்கு அதிகமான மாணவர் தொகையினருக்கு ஒவ்வொரு பாடசாலைக்கும் பாடசாலை வருடம் ஆரம்பிப்பதற்கு முன்பதாகப் பாடநூல்களை பெற்றுக்கொடுப்பதே இப்பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பாகும். இச்செயற்பாட்டின்போது பாடசாலைகள் மற்றும் விநியோக மத்திய நிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற தொகைகளின் அடிப்படையில் ஒவ்வொரு பாடசாலைகள் மற்றும் மத்திய நிலையங்களுக்கு அவசியமான பாடநூல்களின் தொகை தீர்மாணிக்கப்படுகின்றது. அடுத்த ஆண்டுக்கு அவசியப்படுகின்ற முழுப்பாடநூல்களின் அளவு தீர்மாணிக்கப்படுவது இத்தொகை அட்டவனை அடிப்படையிலேயே ஆகும்.

பொறுப்புக்கள்

- ❖ தீவு முழுவதும் காணப்படும் அனைத்து தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், மற்றும் பிரிவெனாக்களுக்கான பாடநூல்களை புதிய பாடசாலை வருடம் ஆரம்பிப்பதற்கு முன்னர் விநியோகித்தல்.

- ❖ நாட்டின் சகல தேசிய பாடசாலைகள், மாகாணப் பாடசாலைகள், அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் வலயகல்விக் காரியாலயங்களுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளை விநியோகித்தல்.

- ❖ பாடநூல் விநியோக நிலையத்திலிருந்து கோட்டக்கல்வி காரியாலயத்திலிருந்து பாடநூல்களைப் பெற்றுக்கொள்கின்ற சகல மாகாணப் பாடசாலைகளுக்குமுரிய பாடநூல்களுக்கான போக்குவரத்து கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும், பாடநூல் விநியோக மத்திய நிலைய மற்றும் கோட்டக் கல்விக் காரியாலயங்களிலுள்ள மத்திய நிலையப் பொறுப்பதிகாரி, உதவி மத்திய நிலையப் பொறுப்பதிகாரி, தொழிலாளர்களுக்கான கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதும்.

- ❖ பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்கமைத்தல்.

- ❖ பாடசாலைப் பாடநூல் தேவைகள் தொடர்பான தகவல்களை ஒன்று திரட்டல் இற்றைப்படுத்தல் சுருக்கத்தை அமைத்தல் மற்றும் களஞ்சியப்படுத்தி வைத்திருதல்.

- ❖ மாகாணக் கல்விக் காரியாலயம் வலயக் கல்விக் காரியாலயம் கோட்டக் கல்விக் காரியாலயம் பாடநூல் விநியோக மத்திய நிலையம் மற்றும் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் தொடர்பு கொண்டு பாடநூல் தேவையை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- ❖ விநியோகம் இடம்பெறும் காலகட்டங்களில் பாடநூல்களைப் பெற்றுக் கொள்ளல், விநியோகித்தல் தொடர்பான நாளாந்த அறிக்கைகளை வடிவமைத்தல்.

- ❖ திணைக்களத்திற்குச் சொந்தமான பாடநூல் களஞ்சிய சாலைகளில் களஞ்சிய சாலை செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் நூல்களின் பெற்றுக்கொள்ளும் தொகை விநியோகிக்கும் தொகைகள் பற்றிய அறிக்கைகளைப் பிழையின்றி வைத்திருப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## பாடநூல் விநியோகம்

2012 பாடநூல் விநியோக செயற்பாட்டைப் பொருத்தமட்டில் நாடுமுழுவதுமுள்ள தேசிய பாடசாலைகளுக்கும் 2000க்குக் கூடிய மாணவர் தொகைகளைக் கொண்ட மாகாணப்பாடசாலைகளுக்கும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் நேரடியாகப் பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டதுடன் ஏனைய அரச பாடசாலைகளுக்குப் பாடநூல் விநியோக மத்திய நிலையங்கள் மூலம் பாடநூல் விநியோகம் இடம்பெற்றது. அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் இலவசப் பாடநூல்கள் வழங்கப்பட்டன. இதன்போது கொழும்பு வலயத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் - நுகேகொடை கோட்டத்திற்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் பாடநூல்கள் நேரடியாகவே விநியோகிக்கப்பட்டன. இதற்கிணங்க அரச பாடசாலைகள் 9732 இலும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் 76 இலும் பிரிவெனாக்கள் 800 இலுமுள்ள 41 இலட்சம் மாணவர் சமூகத்துக்கு 437 வகையான பாடநூல் வகையின் கீழ் ஏறத்தாழ 38 மில்லியன் அளவு நூல்கள் விநியோகிக்கப்பட்டன.

## பாடநூல் மீள்பாவனைக்கான நடவடிக்கைகள்

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் பாடநூல்களை வருட இறுதியில் மீள் பாவனையின் பொருட்டு திருப்பி ஒப்படைக்க வேண்டும். (ஆரம்பப் பிரிவுக்கு வழங்கப்படும் பாடநூல்கள் செயல்நூல்கள் க.பொ.த.(சா/த) ப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நூல்கள் மீள எடுக்கப்படுவதில்லை தரம் 6 முதல் 9 வரையான வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே பாடநூல் மீள்பாவணை தொடர்பான செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் பாடநூல்களைச் சிறப்பாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவதன் பெறுமதி தொடர்பான விளக்கமொன்றைப் பெற்றுக் கொடுப்பதும் மற்றும் அரசினால் இது தொடர்பாக மேற்கொள்ளப்படும் செலவுகளைக் குறைப்பதுவுமே இச் செயற்திட்டத்தின் முதன்மை நோக்கமாகும்.

## பாடநூல் விநியோக விழா

2013 ஆம் வருடத்துக்கான பாடநூல் விநியோக உத்தியோக பூர்வ விழா இம்முறை கண்டி தர்மராஜர் கல்லூரியிலேயே ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்விழாவானது 2012 டிசம்பர் 6 ஆம் திகதியன்று கௌரவகல்வி அமைச்சரின் தலைமையில் மத்திய மாகாண ஆளுனர் மற்றும் மத்திய மாகாண முதலமைச்சர்களின் பங்குபற்றுதலுடன் இடம் பெற்றது. அதன் போது விஷேட உதவி தேவைப்படும். மாணவர்களுக்குப் பாடநூல்கள் வழங்கப்பட்டமை ஒரு விஷேட நிகழ்வாகும். இலங்கை முழுவதும் பாடநூல் விநியோக தினமாக இத்தினம் பிரகனப்படுத்தப்பட்டதுடன் இதனுடன் இனைந்ததாக நாட்டின் சகல பாடசாலைகளிலும் பாடநூல் விநியோக செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு இடம்பெற்றன.

**வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் பாடநூல்களை வழங்கும் விஷேட செயற்திட்டம்**

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களுக்கு மீண்டும் உடனடியாக அவர்களுக்கு அவசியமான பாடநூல்களை வழங்குவதற்கான விஷேட செயற்பாடொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்காக மேலதிக கோரல்கள் கிடைக்கப்பெற்று ஒரு சில தினங்களுக்குள்ளேயே அவர்களின் தேவையை நிறைவு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிந்தது.

**நூல் விநியோக உபகுழு**

பாடநூல் விநியோகத்தின் போது விஷேடமாகக் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய பிரிவுக்காக பல உப குழுக்களை தெரிவு செய்யப்படவேண்டி ஏற்பட்டது.

(அ) பாட நூல்களின் தரத்தை மதிப்பீட்டுக் குழு உத்தியோகத்தர் மூலம் உரிய விடய அடிப்படையிலும் மொழிமூல அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு களஞ்சியங்களுக்கு வரும் நூல்களைத் திடீர் சோதனைக்குட்படுத்தும் செயலொழுங்கொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

(ஆ) செயற்திட்ட உருவாக்கத்துக்கும் தரமுகாமைத்துவத்துக்குமான பிரிவொன்று நூல் விநியோகப் பிரிவுடன் ஒன்றிணைக்கப்பட்டது. நூல் விநியோக செயற்பாட்டைத் திட்டமிடுவதுடன், பாடசாலைகளுக்கும் - விநியோக மத்திய நிலையங்களுக்கும், கோட்டக் கல்விக் காரியாலயங்களுக்கும் அனுப்பும் நூல்களுக்கான விநியோகக் கட்டளைகளைத் தயார் செய்தலும் இதன் பொறுப்பாகும். களஞ்சிய சாலைகளுக்கு வரும் நூல் வகைகள், தொகைகள் என்பன தொடர்பான நாளாந்த விபரங்களைப் பெற்று விநியோகக் கட்டளைகளை ஒழுங்கு படுத்துவதன் மூலம் ஒரே மாவட்டத்துக்கு நூல் போக்குவரத்துச் செய்யும் முறைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு இதன் மூலம் (முடியுமாகியது) இடம் கிடைத்தது.

(இ) பாடநூல் கோரல் படிவங்களை 03 வர்ணங்களில் அச்சிட்டு, கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் அதிபர்களுக்கு அனுப்பப்படுகின்றன. விபரங்களை எடுப்பிக்கும் போதும், நூல்களை விநியோகிக்கும் போதும் ஏற்படும் தவறுகளைக் குறைத்து அக்கருமத்தைச் செயற்திறன் மிக்கதாகவும், நேர்த்தியாகவும் மேற்கொள்வதற்கு இதனால் முடிந்துள்ளது. ஆரம்ப பிரிவெனாக்களுக்குரிய பாடநூல்களும் கோட்டக் கல்விக் காரியாலயம் மூலம் விநியோகிக்கப்படுவதுடன் பிரிவெனாதிபதிகளின் பிரிவெனாக்களுக்கு அவசியமான பாடநூல்கள் தொடர்பான தொகைப்பட்டியலும் வருடாந்த கோரல் பட்டியலில் உள்வாங்கப்பட்டு எடுப்பிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பாடநூல் போக்குவரத்துக்கான கொடுப்பனவு வவுச்சர் ஒழுங்குப்படுத்தல்**

(அ) பாட நூல் விநியோக நிலையத்திலிருந்து பாடசாலை வரை போக்குவரத்துச் செய்வதற்காக அதிபர்களினால் மேற்கொள்ளப்படும் செலவுகளை மீள்நிரப்பல் செய்யும் பொருட்டு கல்வி வெளியீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்படும் வவுச்சர்களைப் பரிசீலித்து நிதிப்பிரிவிற்கு அனுப்புதல்.

(ஆ) பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்களை ஒழுங்குப்படுத்தி தேவையான ஏனைய நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைத்தல்.


**பாடநூல் போக்குவரத்து நிறுவனங்களுக்கான கொடுப்பனவு வவுச்சர்கள் தயார் செய்யப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக அனுப்பப்படல்**








**பாடநூல் விநியோகம்**





## 10. நிதிப் பிரிவு

கல்வி வெளியீட்டு திணைக்களமானது கல்வி அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வருடாந்தம் 2900 மில்லியன் ரூபாய் அளவு ஒதுக்கின் கீழ் இயங்கும் ஒரு தனி நிதிப் பிரிவாகும்.

நூல் விநியோகம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடல் உட்பட அனைத்து நடவடிக்கைகளுக்கும் அவசியமான அதிகாரப்பலம். நிதி அதிகாரங்களை வழங்கி நூல் வெளியீட்டை காரியசித்தியுடன் நடைமுறைப்படுத்துவதற்கு முடியுமான விதத்தில் கல்வி வெளியீட்டு திணைக்களமானது Aதரத்திலான ஒருதிணைக்களநிலைக்கு உயர்தரமாக் கப்பட்டுள்ளது.

நிதிப்பிரிவுக்காக பிரதம கணக்காளர், கணக்காளர் உட்பட்ட முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தி யோகத்தர் 13 பேரும் வரவு செலவு உதவியாளர் ஒருவரும், நிதி உதவியார் ஒருவரும், அபிவிருத்தி உதவியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இலவச பாடநூல் விநியோகம் எனும் அரசின் செயற்பாட்டைச் செயற்படுத்துவதற்கு மேலதிகமாக உயர்தர மற்றும் ஏனைய பரீட்சைகளை இலக்காகக் கொண்ட கல்வி வெளியீடுகள் மற்றும் கடந்த வருடங்களின் பரீட்சை வினாப் பத்திரங்கள், மதிப்பீட்டு நடவடிக்கை முறைகளை வடிவமைத்து அச்சிட்டு சலுகை விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

திணைக்களத்தின் செலவுக்காக வருடாந்த வரவு செலவுத்திட்ட உத்தேச மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கப்படும் ஒதுக்குக்கேற்ப ஒன்றிணைந்த நிதியத்தில் இருந்து நிதி வழங்கப்படுகின்றது.

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் கீழ் ஆறு விற்பனை மேம்பாட்டு நிலையங்கள் பின்வரும் இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சு வளாகம்.
ஓட்கட் மாவத்தை
யாழ்ப்பாணம் - யாழ் மத்திய கல்லூரி
தேசிய கல்வி நிறுவகம் - மகரகமை
ஆசிரியர் பயிற்சி நிலையம் - மீப்பே
கோட்டை புகையிரத நிலையம்

பாடநூல்கள், ஏனைய வாசிப்பு நூல்கள், மொழி பெயர்ப்புப் புத்தகங்கள், கலைச்சொல் அகராதிகள், சொல் அகராதிகள், கல்விப்புல இறுவெட்டுகள், கல்வியியலாளர் குழுவொன்று மூலம் விதந்துறைக்கப்பட்ட எழுத்தாளர்களின் நூல்கள் என்பன இந்நிலையங்களில் விற்பனை செய்யப்படுவதுடன், தேசிய பாடத்திட்டத்தின் கீழ் ஆங்கில மொழி மூலமாகக் கல்வி போதிக்கின்ற தனியார் பாடசாலைகளுக்கான நூல் விற்பனையும் 2008 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2010 முதல் நடமாடும் வாகனம் மூலம் நாடு பூராகவும் நூல் விற்பனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**2012 ஆம் வருடத்தில் நூல் விற்பனை மூலம் பெறப்பட்ட மொத்த வருமானம் ரூபா 62,836,384,38 ஆகும்.**

| | |
|---|---|
| இசுருபாய நூல் விற்பனை நிலையம் | ரூ 12,289,820,60 |
| ஓட்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | ரூ 41,517,660,23 |
| யாழ்பாண நூல் விற்பனை நிலையம் | ரூ 1,478,578,75 |
| தே.க.நி. மகரகம நூல் விற்பனை நிலையம் | ரூ 5,348,351,30 |
| ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம் | ரூ 1,316,965,00 |
| கோட்டை புகையிரத நிலைய நூல் விற்பனை நிலையம் | ரூ 884,990,50 |
| **மொத்தம்** | **ரூ 62,836,384,38** |

இதற்கு மேலதிகமாக தனியார் நூல் வெளியீட்டாளர்களின் நூல்களையும் விற்பனை செய்யும் செயற்பாடொன்று நடைமுறைப் படுத்தப்படுகின்றது.

**2012 ஆம் ஆண்டு தனியார் நூல் விற்பனை மூலம் கிடைத்த மொத்த வருமானம் ரூ. 479,172,50 ஆகும்.**

| | |
|---|---|
| இசுருபாய நூல் விற்பனை நிலையம் | ரூ 39,980,00 |
| ஓட்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | ரூ 86,702,50 |
| தே.க.நி. மகரகம நூல் விற்பனை நிலையம் | ரூ 223,900,00 |
| ஆசிரியர் பயிற்சி நிலையம் மீப்பே நூல் விற்பனை நிலையம் | ரூ 110.185,00 |
| கோட்டை புகையிரத நிலைய நூல் விற்பனை நிலையம் | ரூ 19,405,00 |
| **மொத்தம்** | **ரூ 479,172,50** |

2012.02.04 ஆம் திகதி முதல் 2012.02.10 ஆம் திகதி வரை நடை பெற்ற தேசத்திற்கு மகுடம் தேசிய மாபெரும் கண்காட்சியிலும் 2012.09.18 முதல் 2012.09.26 வரை கொழும்பு பண்டாரநாயக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச புத்தகக் கண்காட்சியிலும் கலந்துக் கொண்டதன் மூலம் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சமூகமளித்திருந்த பாடசாலை மாணவர்களுட்பட பெரும் தொகையினருக்கு திணைக்களத்தின் வெளியீடுகளைப் பெற்று கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

# கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் நூல் விற்பனை வருமானம் 2012

| மாதம் | ஓல்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம் | இசுருபாய நூ.வி.நி | யாழ்பாண நூ.வி.நி | மீப்பே நூ.வி.நி | கோட்டை நூ.வி.நி | மகரகம நூ.வி.நி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 6,200,294.05 | 2,200,153.00 | 168,799.35 | 153,202.00 | 115,818.00 | 460,196.05 | **9,298,462.45** |
| பெப்ரவரி | 1,784,592.21 | 758,725.00 | 127,855.45 | 112,221.00 | 50,295.50 | 458,319.40 | **3,292,008.56** |
| மார்ச் | 2,011,738.90 | 597,051.90 | 58,552.10 | 126,312.00 | 100,498.00 | 539,353.60 | **3,433,506.50** |
| ஏப்ரல் | 1,315,425.35 | 469,496.50 | 217,512.80 | 106,727.00 | 60,248.00 | 404,011.35 | **2,573,421.00** |
| மே | 1,904,317.93 | 578,788.50 | 194,362.50 | 108,044.00 | 77,557.00 | 557,108.85 | **3,420,178.78** |
| ஜுன் | 2,418,399.15 | 539,995.80 | 186,145.40 | 159,817.00 | 106,791.00 | 594,088.90 | **4,005,237.25** |
| ஜுலை | 2,495,518.35 | 583,207.50 | 116,997.00 | 125,480.00 | 86,724.00 | 557,276.00 | **3,965,202.85** |
| ஆகஸ்ட் | 1,761,073.81 | 689,213.00 | 91,448.90 | 80,218.50 | 58,281.00 | 390,743.90 | **3,070,979.11** |
| செப்டெம்பர் | 1,722,867.50 | 1,094,802.00 | 60,399.55 | 65,166.50 | 35,203.00 | 417,497.45 | **3,395,936.00** |
| ஒக்டோபர் | 4,979,415.76 | 994,115.50 | 79,104.40 | 82,512.00 | 60,757.00 | 381,085.00 | **6,576,989.66** |
| நவம்பர் | 4,890,466.20 | 1,039,682.40 | 56,885.00 | 78,784.00 | 65,376.00 | 327,894.80 | **6,459,088.40** |
| டிசம்பர் | 10,033,551.02 | 2,444,590.00 | 120,516.30 | 118,481.00 | 67,442.00 | 260,776.00 | **13,045,356.32** |
| மொத்தம் | **41,517,660.23** | **11,989,821.10** | **1,478,578.75** | **1,316,965.00** | **884,990.50** | **5,348,351.30** | ***62,536,366.88*** |

| தனியார் நூல் விற்பனை வருமானம் 2012 | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| **மாதம்** | **ஓல்கொட் மாவத்த நூல் விற்பனை நிலையம்** | **இசுருபாய நூ.வி.நி** | **மீப்பே நூ.வி.நி** | **கோட்டை நூ.வி.நி** | **மகரகம நூ.வி.நி** | **மொத்தம்** |
| ஜனவரி | 3,435.00 | - | 8,920.00 | 1,935.00 | 18,870.00 | **33,160.00** |
| பெப்ரவரி | 360.00 | - | 1,450.00 | 950.00 | 9,485.00 | **12,245.00** |
| மார்ச் | 415.00 | - | 670.00 | - | 24,840.00 | **25,925.00** |
| ஏப்ரல் | 1,240.00 | - | 850.00 | 1,565.00 | 17,870.00 | **21,525.00** |
| மே | 2,975.00 | - | 400.00 | 1,485.00 | 20,005.00 | **24,865.00** |
| ஜூன் | 3,580.00 | 600.00 | 15,530.00 | 1,820.00 | 30,980.00 | **52,510.00** |
| ஜூலை | 27,500.00 | - | 1,350.00 | 2,990.00 | 27,560.00 | **59,400.00** |
| ஆகஸ்ட் | 3,040.00 | 11,405.00 | 25,525.00 | 3,300.00 | 21,700.00 | **64,970.00** |
| செப்டெம்பர் | 870.00 | 5,745.00 | 11,295.00 | 1,670.00 | 8,830.00 | **28,410.00** |
| ஒக்டோபர் | 29,950.00 | 4,695.00 | 15,050.00 | 1,250.00 | 18,265.00 | **69,210.00** |
| நவம்பர் | 11,887.50 | 8,365.00 | 15,590.00 | 1,810.00 | 14,230.00 | **51,882.50** |
| டிசம்பர் | 1,450.00 | 8,170.00 | 13,555.00 | 630.00 | 11,265.00 | **35,070.00** |
| **மொத்தம்** | **86,702.50** | **38,980.00** | **110,185.00** | **19,405.00** | **223,900.00** | ***479,172.50*** |

## 11. வருடாந்த ஒதுக்கீடும் செலவீனங்களும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் 2012ஆம் ஆண்டில் உண்மையான மீண்டு வரும் செலவினம் 21.81மி ரூபாயாக இருந்ததுடன் ஒதுக்கீடு 29.44ம் ரூபாய்களாகும். செலவுகளை குறைக்கும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கை காரணமாகவே இச்சேமிப்பை பெறமுடிந்தது. மூலதனச் செலவை நோக்குமிடத்து ஒதுக்கீடு 60.8மி ரூபாயாகவும் செலவு 44.93மி. ரூபாயாகவும் காணப்பட்டது.

| மொத்த ஒதுக்கீடும் உண்மையான செலவும் (மீண்டு வரும் செலவுகள்) - 2012 | | | |
|---|---|---|---|
| நியதி | செயற்திட்டம் | மெத்த ஒதுக்கீடு | உண்மைச் செலவு |
| | | 2012 | 2012 |
| 1 | ஆளுக்குரிய வேதனம் | 26,950,000.00 | 19,414,059.01 |
| | வேறு மீண்டுவரும் செலவுகள் | 2,494,000.00 | 2,400,448.92 |
| | **மொத்த மீண்டு வரும் செலவுகள்** | **29,444,000.00** | **21,814,507.93** |

| மொத்த ஒதுக்கீடும் உண்மைச் செலவுகளும் (மூலதனம்) - 2012 | | | |
|---|---|---|---|
| நியதி | செயற்திட்டம் | மெத்த ஒதுக்கீடு | உண்மைச் செலவு |
| | | 2012 | 2012 |
| | **மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பும் மேம்பாடும்** | | |
| | வாகனங்கள் | 200,000.00 | 182,293.09 |
| | **மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு** | | |
| | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 600,000.00 | 596,438.00 |
| | பொறித் தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் | 800,000.00 | 780,390.00 |
| | கட்டிடங்கள் - கட்டமைப்புக்கள் | 43,128,000.00 | 43,128,000.00 |
| 1 | **மனிதவள விருத்தி** | | |
| | பயிற்சிகளும் - இயலுமை விருத்தியும் | 600,000.00 | 239,031.00 |
| | **ஏனைய மூலதனச் செலவுகள்** | | |
| | பாடசாலை பாடநூல்களின் தரத்தினை மேம்படுத்தல் - அறிவுமையப் பொருளாதாரத்துக்காக மானிட மூலதன செயற்திட்டம் - (இலங்கை அரசு - உலக வங்கி) | 10,000,000.00 | - |
| | **மொத்தம்** | **55,328,000.00** | **44,926,152.09** |

| அனுமதிக்கப்பட்ட முற்பணக் கணக்கு - 2012 | | | |
|---|---|---|---|
| நியதி | செயற்திட்டம் | மெத்த ஒதுக்கீடு | உண்மைச் செலவு |
| | | 2012 | 2012 |

| | | | |
|---|---|---|---|
| | மிகக் கூடிய செலவு எல்லை (பாடநூல் அச்சிடல் மற்றும் விநியோகம்) | 2,900,000,000.00 | 1,827,276,033.51 |
| | மிகக்குறைந்த இருப்பு எல்லை | 1,850,000,000.00 | 1,853,728,062.62 |
| | மிகக் கூடிய செசலவு மீதி எல்லை | 4,000,000,000.00 | 998,635,281.08 |

**அரச உத்தியோகத்தரின் முற்பணக் கணக்கு - 2012**

| நியதி | செயற்திட்டம் | மொத்த ஒதுக்கீடு 2012 | உண்மைச் செலவு 2012 |
|---|---|---|---|
| | மிகக் கூடிய செலவு எல்லை | 5,280,000.00 | 5,283,792.00 |
| | மிகக் குறைந்த இருப்பு எல்லை | 3,740,000.00 | 7,198,469.00 |
| | மிகக் கூடிய செலவு மீதி எல்லை | 30,416,000.00 | 19,424,520.36 |

மேலுள்ள விபரங்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.............................

ஆர்.ஏ.ஜே.ஹென்றி

பிரதம கணக்காளர்

கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்துக்காக.

## 12. 2012 முன்னேற்றத்தைக் காட்டும் பட்டியல்

**12.1** 2013 ஆம் வருடத்துக்காக ஒவ்வொரு தரத்துக்குமாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நூல்வகைகளும், ஒவ்வொரு மாணவர்களுக்கும் கிடைக்கும் நூல்களின் தொகையும்

| தரம் | நூல்களின் தொகை (மொழி, சமயம், விருப்புக்குறிய பாட அடிப்படையில்) | | | ஒரு மாணவன் பெற்றுக்கொள்ளும் நூல்களின் தொகை |
|---|---|---|---|---|
| | தனி நூல்களாக | தொகுதியாக | மொத்தம் | |
| தரம் - 01 | 14 | 00 | 14 | 04 |
| தரம் - 02 | 14 | 00 | 14 | 04 |
| தரம் - 03 | 12 | 06 | 18 | 08 |
| தரம் - 04 | 13 | 02 | 15 | 06 |
| தரம் - 05 | 13 | 02 | 15 | 06 |
| தரம் - 06 | 28 | 10 | 38 | 14 |
| தரம் - 07 | 17 | 32 | 49 | 20 |
| தரம் - 08 | 13 | 40 | 53 | 21 |
| தரம் - 09 | 23 | 20 | 43 | 16 |
| தரம் - 10 | 49 | 19 | 68 | 15 |
| தரம் - 11 | 37 | 32 | 69 | 15 |
| தரம் - 12 | 01 | 00 | 01 | 01 |
| மொத்தப் பாட நூல்கள் | 234 | 163 | 397 | 130 |
| பிரிவெனா - 01 | 7 | 0 | 7 | 7 |
| பிரிவெனா - 02 | 6 | 0 | 6 | 6 |
| பிரிவெனா - 03 | 9 | 0 | 9 | 9 |
| பிரிவெனா - 04 | 9 | 0 | 9 | 9 |
| பிரிவெனா - 05 | 9 | 0 | 9 | 9 |
| மொத்தப் பிரிவெனா நூல்கள் | 40 | 0 | 40 | 40 |
| முழு மொத்தம் | 274 | 163 | 437 | 170 |

**12.2.** 2012ல் உற்பத்தி செய்யப்பட்ட பாடநூல்கள் மொழிமூல அடிப்படையில் விநியோகிக்கப்பட்ட முறையைக் கீழ் வரும் அட்டவணையில் காணலாம். - 03

| கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் 2013ஆண்டுக்காக வெளியிடப்பட்டபாடசாலைப் பாட நூல்கள் (மொழி மூல அடிப்படையில்) | | |
|---|---|---|
| **தொடர் இலக்கம்** | **மொழி மூலம்** | **நூல் வகைகளின் எண்ணிக்கை** |
| 1 | சிங்கள மொழி நூல்கள் | 160 |
| 2 | தமிழ் மொழி மூல நூல்கள் | 158 |
| 3 | ஆங்கில மொழி மூல நூல்கள் | 53 |
| 4 | ஆங்கில மொழி மூல நூல்கள் (எல்லா மொழி மூலத்திற்குமாக) | 26 |
| 5 | பிரிவெனா சிங்கள மொழி மூல நூல்கள் | 31 |
| 6 | பிரிவெனா ஆங்கில மொழி நூல்கள் | 4 |
| 7 | பிரிவெனா தமிழ் | 5 |
| | **மொத்த நூல்கள் தொகை** | **437** |


**12.3. 2012 ஆம் வருடம் கல்வி வெளியீட்டுத் திணைக்கள வெப்தளத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ள பாடநூல்களின் தொகை**

| தரம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தரம் 01 | 6 | | | 6 |
| தரம் 02 | 6 | 2 | | 8 |
| தரம் 03 | | | | |
| தரம் 04 | | | | |
| தரம் 05 | | | 3 | 3 |
| தரம் 06 | 7 | 6 | 7 | 20 |
| தரம் 07 | 15 | 16 | 9 | 40 |
| தரம் 08 | 17 | 20 | 13 | 50 |
| தரம் 09 | 20 | 17 | 10 | 47 |
| தரம் 10 | 19 | 21 | 8 | 48 |
| தரம் 11 | 19 | 17 | 13 | 49 |
| **பாடநூல்களின் மொத்தத் தொகை** | **109** | **99** | **63** | **271** |

## 12.4. பாடசாலைப் பாடநூல் விநியோகம் - வளர்ச்சி 2013

| தொடர் இலக்கம் | மாகாணம் | கோரிய நூல்களின் தொகை | தற்போதைக்கு விநியோகித்துள்ள தொகை | விநியோகத் தொகை - கோரிய தொகையின் நூற்று விகிதத்தில் |
|---|---|---|---|---|
| 1 | மேற்கு | 9,081,607 | 9,081,607 | 100.00 |
| 2 | தெற்கு | 4,566,895 | 4,566,895 | 100.00 |
| 3 | மத்திய | 4,537,974 | 4,537,974 | 100.00 |
| 4 | வடமேல் | 4,203,645 | 4,203,645 | 100.00 |
| 5 | கிழக்கு | 4,102,144 | 4,102,144 | 100.00 |
| 6 | சப்ரகமுவ | 3,178,233 | 3,178,233 | 100.00 |
| 7 | ஊவா | 2,716,526 | 2,716,526 | 100.00 |
| 8 | வடக்கு | 2,625,718 | 2,625,718 | 100.00 |
| 9 | வடமத்திய | 2,428,522 | 2,428,522 | 100.00 |
| **மொத்தம்** | | **37,441,264** | **37,441,264** | **100.00** |

## 12.5. கோரிய மற்றும் விநியோகித்த அளவுகள்



## 12.6. விநியோக செயற்பாட்டை வினைத்திறன் மிக்கதாக்கும் பொருட்டு பாடநூல் விநியோக நிலையங்கள் பரந்துள்ள முறை

| தொடர் இல | மாகாணம் | கோட்டக் கல்வி காரியாலயம் | விநியோக மத்திய நிலையம் | தேசிய பாடசாலை | 2000 மேற்பட்ட மாணவர் களுள்ள பாடசா லைகள் | 2000 மேற்பட்ட மாணவர் களை கொண்ட அரச உதவி பெறும் தனியார் பாடசாலை கள் | கொழும்பு வலய மற்றும் நுகேகொட கோட்ட 2000க்கு குறைந்த மாணவர் களைக் கொண்டபா டசாலைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேல் | 30 | 20 | 69 | 59 | 28 | 130 | **336** |
| 2 | மத்திய | 51 | 12 | 51 | 28 | 02 | - | **144** |
| 3 | தென் | 33 | 16 | 64 | 09 | 01 | - | **123** |
| 4 | வட மேல் | 31 | 14 | 35 | 19 | - | - | **99** |
| 5 | ஊவா | 22 | 16 | 36 | 08 | - | - | **82** |
| 6 | வடக்கு | 34 | 05 | 13 | 06 | 01 | - | **59** |
| 7 | கிழக்கு | 49 | - | 28 | 04 | - | - | **81** |
| 8 | வடமத்திய | 22 | 18 | 10 | 10 | - | - | **60** |
| 9 | சப்ரகமுவ | 01 | 83 | 28 | 10 | - | - | **122** |
| **மொத்தம்** | | **273** | **184** | **334** | **153** | **32** | **130** | **1106** |

## 12.7 2013 ஆம் ஆண்டுக்கான பாடசாலைப் பாடநூல் அச்சிடல் - 2012

| தொடர் இலக்கம் | அச்சகம் | நூல் வகைகளின் எண்ணிக்கை | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அரசாங்க அச்சகம் (GP) | 05 | 975000 |
| 02 | அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் (SPC) | 77 | 7304250 |
| 03 | திறந்த விலைமனுக் கோரல் | 322 | 29173950 |
| **அச்சிடப்பட்ட நூல்களின் மொத்தம்** | | **404** | **37453200** |

## 12.8 2013 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி அச்சிடல் - 2012

| தொடர் இலக்கம் | நூல் வகை | நூல் வகைகளின் தொகை |
|---|---|---|
| 01 | 6-11 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி | 01 |
| 02 | 12- 13 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி | 07 |
| **அச்சிடப்பட்ட நூல் வகைகளின் மொத்தம்** | | **08** |

## 12.9 2013 ஆம் ஆண்டுக்கான வினாவிடை நூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள் அச்சிடல் - 2012

| தொடர் இலக்கம் | நூல் வகை | நூல் வகைகளின் தொகை |
|---|---|---|
| **01** | மேலதிக நூல்கள் | 06 |
| **02** | வினாவிடை நூல்கள் | 06 |
| **03** | க.பொ.த சா/த மதிப்பீட்டறிக்கை | 09 |
| **அச்சிடப்பட்ட நூல் வகைகளின் மொத்தம்** | | **21** |

## 13. புதிய பிரவேசங்கள்

- **2012 ஆம் வருடம் வெளியிடப்பட்ட புதிய மேலதிக வாசிப்பு நூல்கள்.**

    - கிரயம் மற்றும் முகாமைத்துவக் கணக்கு (உயர் தரம் மற்றும் உயர் பரீட்சைகள்)
    - பொருளாதார விருத்தியும் அபிவிருத்தியும் (உயர் தரம் மற்றும் உயர் பரீட்சைகள்)
    - கணித ஒப்படைகள் - தரம் 6 (சிங்களம்)
    - கணித ஒப்படைகள் - தரம் 6 (தமிழ்)
    - கணிதத்துக்கான துணைக்கரம் - தரம் 11 (சிங்களம்)
    - கணிதத்துக்கான துணைக்கரம் - தரம் 11 (தமிழ்)

- **2012 ஆம் வருடத்தில் ஆக்கப்பட்ட புதிய பிரிவெனா நூல்கள்**

    - சமஸ்கிருதம் - தரம் 2
    - சிங்களம் - தரம் 2
    - சமூகவியல் - தரம் 3
    - பாளி - தரம் 1

    இந்நூல்கள் கவர்ச்சிகரமான முகப்புடன் கூடியதாக வெளிக்கொணரப்பட்டுள்ளன.

- **வெளியீட்டுத் திணைக்களத்தின் வெப்தளத்தை புனர் நிர்மாணம் செய்தல்**

- **பிட்டிபன களஞ்சியத் தொகுதி - இரண்டாம் கட்ட கீழ்மாடி 2012.09.04 திகதியன்று திறந்து வைத்தல்**

- **பரீட்சைத் திணைக்களம் மூலம் வெளியிடப்படும் கணிப்பீட்டு அறிக்கைகளை அச்சிட்டு சலுகை விலைக்கு விற்பனைக்கு விடல்**

- **கல்வி அமைச்சின் மூலம் நடைமுறைபடுத்தப்படும் வினைத்திறன் மேம்பாட்டு செயற்திட்டத்துடன் இணைந்ததாக கல்வி வெளியிட்டுத் திணைக்களத்துள்ளும் வினைத்திறன் மேம்பாட்டு செயற்திட்டமொன்றை ஆரம்பித்தல்.**

# 14. சுருக்கம்

## 2012 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்ளும் முன்னேற்றமும்

1. **2013 ஆம் வருடத்துக்கான பாடசாலை மாணவர்களுக்கு தேவையான நூல்களை ஆக்குதல்**

   2013 ஆம் வருடத்துக்குப் பாடசாலை மாணவர்களுக்கு அவசியமான சகல பாடநூல்களும் உரிய கால நேரத்துள் உற்பத்தி செய்து முடிக்கப்பட்டன.

2. **2013 ஆம் வருடத்துக்கான மீள்பதிப்பு செய்யப்படும் பாடநூல்களின் தரத்தை விருத்தி செய்தல்**

   2013 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் பாடநூல்கள் மீள் அச்சிடலுக்கு முன்னர் நிபுணத்துவக் குழுவின் பங்குபற்றலுடன் விடயத்தை இற்றைப்படுத்தல் மற்றும் தரத்தை மேம்படுத்தல் செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

3. **உயர் தரத்துக்கும் வேறு பரீட்சைக்குமாக மேலதிக நூல்கள், வினாவிடை நூல்களை உற்பத்தி செய்தல்.**

   நிபுணத்துவக் குழுக்களின் பங்குபற்றலுடன் மேலதிக நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் விற்பனை மேம்பாட்டு நிலையங்களிலும் பதிவு செய்யப்பட்ட நூல்விற்பனைநிலையங்களிலும் சலுகை விலையில் விற்பனை செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. 2011ஆம் வருட புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதர பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் வினாதாள்களும், விடைகளும் - வினாவிடை நூல்களாக இரு மொழி மூலங்களிலுமாக வடிவமைக்கப்பட்டு சலுகைவிலையில் விற்பனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

4. **2013 வருடத்துக்கு மாணவர்களுக்கு அவசியமான பாடநூல்களை பாடசாலைகளுக்கும் நூல் விநியோக நிலையங்களுக்கும் விநியோகித்தல்.**

   பாடசாலைகளினாலும், விநியோக நிலையங்களினாலும் கோரப்பட்ட சகல பாட நூல்களும் 2012 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் உரிய விநியோக நிலையங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு விநியோகித்து முடிக்கப்பட்டுள்ளன.

5. **மனிதவள விருத்திச் செயற்பாடுகள்**

   - தென் கொரிய அரசின் அனுசரனையில் 2012.09.24 முதல் 2012.09.28 வரை கொரியாவில் நடந்த கல்விச் செயற்பாட்டில் க.வெ.ஆ. நாயகம் பங்குபற்றினார்.

   - கொழும்பு பல்கலைகழகத்தின் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்துக்கான தேசிய நிறுவகம் (NILIS) மூலம் எழுத்தாளர்களுக்காக நடைபெற்ற டிஜிட்டல் தொழில்நுட்பப் பாடநெறியில் (10 நாட்கள்)உதவி ஆணையாளர்கள் நால்வர் பங்குபற்றியதுடன் வெற்றிகரமாக நிறைவும் செய்தனர்.

- பல்வேறு சந்தர்ப்பங்களிலும் முகாமைத்துவ உதவியாளர் சேவை உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பயிற்சி நெறிகளில் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன.

6. **பிட்டிபன – களஞ்கியசாலை தொகுதி**

**இரண்டாம் கட்டம் Phase - C – கீழ்மாடி**

2012.09.04 அன்று திறந்து வைக்கப்பட்டது. அன்று முதலே பாடநூல்கள் களஞ்சியப்படுத்தும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்றது.

**முன்றாம் கட்டடம்**

100 x 30 கட்டடத்தின் சுவர் கட்டப்பட்டு கூரை இடப்பட்டுள்ளது. 2013.06.30 திகதி வேலைகளை பூரணப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

7. **வினைத்திறன் மேம்படுதல் வேலைத்திட்டம்**

கல்வி அமைச்சின் வினைத்திறன் மேம்பாட்டு பிரிவு மூலம் அமுல் படுத்தப்படுகின்ற வினைத்திறன் மேம்பாட்டு செயற்திட்டத்துடன் இணைந்ததாக கல்வி வெளியீட்டுத் திணைக்களத்துள்ளும் வினைத்திறன் மேம்பாட்டு செயற்திட்டமொன்று அரம்பிக்கப்பட்டுள்ளது.

8. **கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் வெப்தளத்துள் பாடநூல்களை உள்வாங்கல்**

திணைக்களம் மூலம் வெளியிடப்படுகின்ற பாடசாலைப் பாடநூல்களை திணைக்கள வெப்தளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கம்(download) செய்யகூடிய விதமாக வெப்தளத்துள் உள்வாங்கப்பட்டுள்ளது.

9. **நூல் விற்பனை நடமாடும் வாகனம்**

கல்வி வெளியீட்டுத் திணைக்களம் மூலம் வெளியிடப்படுகின்ற மேலதிக வாசிப்பு நூல்கள் விடய நூல்கள், வினா விடை நூல்கள், பரிந்துரைக்கப்பட்ட நூல்கள், ஆசிரியர்அறிவுரைப்பு வழிகாட்டிகளை விற்பனை செய்யும் பொருட்டு இரண்டு நடமாடும் வாகனங்கள் நாடு பூராகவும் பாடசாலைகளுக்கு அனுப்பப்படுகின்றன.

10. **வெளி எழுத்தாளர்களின் நூல்களை கல்வி வெளியீட்டுத் திணைக்கள விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை செய்தல்**

நிபுணத்துவக் குழுவொன்றின் அனுமதியின் பின் அரச நிதிப் பிரமாணங்களுக்கிணங்க கல்வி வெளியிட்டுத்திணைக்களத்தின் நூல் விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை செய்வதற்கென நூல்கள் தெரிவு

செய்யப்படுகின்றன.அவை விற்பனை மேம்பாட்டு நிலையங்களில் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.





**இரண்டாம் சட்டம் திறந்து வைக்கப்படல்**

**நூல் விற்பனை மேம்பாட்டு நிலையம் -இசுருபாய**






**நூல் விற்பனை மேம்பாட்டு நிலையம்**

**தரமான நூல் உரிய வேளைக்கு மாணவர் கையில்**

